| | 60 | என்பவர் மூலம் பழுதினை சரிசெய்வதற்கு நகர்மன்றத்தின் அனுமதிக்கு.<br>**அலுவலக குறிப்பு : 1.** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்படி பணி பொதுமக்கள் அத்தியாவசிய சுகாதாரப்பணி என்பதால் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று இந்நகராட்சியில் பதிவுபெற்ற ஒப்பந்ததாரர் திரு. ஆர். இன்னாசிமுத்து என்பவர் மூலம் பணி மேற்கொள்ளவும் மற்றும் பணி செய்தமைக்கு வரப்பெற்ற பில்பட்டியலில் கண்ட தொகையினை வழங்குவதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். இ1/1221/2022**<br>**<u>பொருள் எண். 23</u>**<br>துவாக்குடி நகராட்சி – பொது சுகாதாரப்பிரிவு – தூய்மை நகருக்கான மக்கள் இயக்கத்தில் குறிப்பாக திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் நகர தூய்மைக்கு அரசாணை எண் G.O.(MS) No.79 நாள் 02.06.2022 ன் படி அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது. அரசு வழிகாட்டுதழின்படி இந்நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை சிறப்பாக நடத்திட குறிப்பாக தரம் பிரித்து (Source Segregation) வாங்கும் வகையில் மக்கும் குப்பை, மக்காத குப்பை மற்றும் முற்றிலும் பயன்படுத்த இயலாத குப்பைகளை சிமெண்ட் தொழிற்சாலைக்கு அனுப்புதல் போன்ற பணிகளை மேற்கொள்ள கடந்த இரண்டு ஆண்டிற்கு முன்பாக மொத்த குடியிருப்புகளான 11029 வீடுகளில் 8398 குடியிருப்புகளுக்கு கணக்கீடு செய்து 400 வீடுகளுக்கு ஒரு BOV வீதம் 14 BOV க்களும் (14x400=5600) 1200 வீடுகளுக்கு 1 LCV வீதம் (1200 வீடு x2=2400) 2 LCV க்கள் வழங்கப்பட்டு பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வருகிறது. மேலும் நகராட்சிகளின் உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரண தேர்தல் கடந்த பிப்ரவரி 2022 ஆம் வருடம் 21 வார்டுகளுக்கான தேர்தல் நடைப்பெற்று தற்போது நகர்மன்ற கூட்டம் நடைப்பெற்று வருகிறது. மேற்கண்ட வார்டுகளில் உள்ள நகர்மன்ற உறுப்பினர்கள் தங்களது வார்டுகளுக்கு குறிப்பாக வார்டு மறுவரையில் குறிப்பிட்ட வார்டுகளான 1,2,3,8 மற்றும் வார்டு எண் 17ல் BHEL மற்றும் NIT பகுதிகள் உள்ளடக்கம். வாகன ஒதுக்கீடு செய்து தூய்மை பணியினை மேற்கொள்ள கேட்டு கொண்டதின் பேரில் கீழ்காணும் விபரப்படி கணக்கீடு செய்யப்படுகிறது.<br>விபரம்<br>மொத்த குடியிருப்புகளின் எண்ணிக்கை = 11029<br>மொத்த குடியிருப்பில் 8398 குடியிருப்புகளுக்கு ஒதுக்கப்பட்டது போக மீதமுள்ள குடியிருப்புகளின்=11029- 8398=2631 குடியிருப்புகள்<br>மேற்காணும் பணியினை சுணக்கம் இல்லாமல் மேற்கொள்ள நகரின் முக்கிய பிரதான சாலைகள் மற்றும் தெருக்கள் போன்ற இடக்களில் திடக்கழிவு மேலாண்மை பணியினை மேற்கொள்ள அரசு வழிகாட்டுதழின்படி கூடுதலாக 3 எண்ணம் LCV க்கள் இந்நகருக்கு தேவைப்படுகிறது. எனவே நிகர தேவையான 3 ம் LCV க்களை தனியார்மயம் மூலம் கொள்ளவும், தற்போது புதிதாக கட்டி முடிக்கப்பட்ட நுண்ணுயிர் மையத்தில் உரம் தயாரிக்கும் பணியினை மேற்கொள்ள BOV க்களிலிருந்து தூய்மை பணியாளர்கள் மூலம் கொண்டு வரும் திடக்கழிவுகளை நகரின் மையப்பகுதிக்கு (Decentralization) வரவரைக்கு மேற்கண்ட திடக்கழிவுகளை LCV வாகனத்திற்கு மாற்றம் செய்து (குப்பைகளை சேகரம் செய்து) கொண்டு வரும் மேற்கண்ட பணி அரசின் முக்கிய பணியாக | அனுமதிக்கப் பட்டது. |

<table>
<tr><td></td><td></td><td>இருப்பதால் சிறப்பாக செயல்படுத்திட மேற்காணும் 3 LCV க்களுக்கு தனியார்மயம் மூலம் பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்</td><td></td></tr>
<tr><td></td><td>61</td><td>ந.க.எண்:1336/H1/2022<br><u>பொருள் எண். 24</u><br>துவாக்குடி நகராட்சிக்கு சொந்தமான நுண்உரம் தயாரிக்கும் மையம் (MCC), OCC மற்றும் பூங்கா மற்றும் ராவுத்தான்மேடு, வ.உ.சி. நகர் மற்றும் முத்துராமலிங்க தேவர் சாலையில் சமுதாய கூடங்கள் உள்ளது. மேற்படி இடங்களில் நகராட்சி சார்பில் பாதுகாப்புக்கு பணியாளர்கள் நியமிக்கப்படாததால் சமூக விரோதிகளால் மேற்படி இடங்கள் சேதப்படுத்தியும், சமூக விரோத செயல்களும் மேற்கொண்டு வருகிறார்கள். மேற்படி நகராட்சி வருவாய் தரத்தக்க மூன்று சமுதாயக்கூட இனஙகளுக்கு பாதுகாப்பு பணியாளர்கள் இல்லாத பட்சத்தில் நகராட்சி சொத்துக்களை சேதப்படுத்தி நகராட்சிக்கு பராமரிப்பு செலவினம் ஏற்படும் நிலை உள்ளது. மேலும் மேற்படி இடங்களை பாதுகாக்கும் நிலைக்கு இந்நகராட்சியில் போதிய பணியாளர்கள் எவரும் இல்லை. அதனால் தனியார் மூலம் (OUT SOURCING) நுண்உரம் தயாரிக்கும் மையம், OCC, பூங்கா மற்றும் சமுதாய கூடத்திற்கு 6 பணியாளர்களை நியமிக்கவும், அவர்களுக்கு 2022ம் ஆண்டின் மாவட்ட ஆட்சித்தலைவர், திருச்சிராப்பள்ளி அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட தொகையை நகராட்சி வருவாய் மூலதன நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :– நகராட்சியின் சொத்துக்கு பாதுகாப்பு கருதி தனியார் மூலம் (OUT SOURCING) 6 பணியாளர்கள் நியமித்துக்கொள்ளவும் அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழுஙகலாம்.</td><td>அனுமதிக்கப் பட்டது.</td></tr>
<tr><td></td><td>62</td><td>ந.க.எண்.1277/அ1/2022<br><u>பொருள் எண். 25</u><br>மாவட்ட ஆட்சித்தலைவர் திருச்சிராப்பள்ளி அவர்களின் கடித எண்.8232/2020/G6 நாள்.21.07.2022–ன் படி, துவாக்குடி நகராட்சியில் கோவிட் –19 பெருந்தொற்று மற்றும் பேரிடர் காலங்களில் (The Commissioner, Thuvakudi Municipality) அவர்களால் துரித நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக Wireless POC Instrument கீழ்க்கண்ட விபரப்படி அரசு விதிகளுக்கு உட்பட்டு பொருத்திக்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதிக்கு.<br><u>சப்ளை செய்யவேண்டிய பொருட்கள்</u>
<table>
<tr><th>வ.எண்</th><th>கருவியின் பெயர்</th><th>யூனிட் ஒன்றின் விலை</th><th>GST 18%</th><th>யூனிட் ஒன்றின் மொத்த விலை ரூ</th><th>தேவை</th><th>கூடுதல் ரூ</th></tr>
<tr><td>1</td><td>Wireless POC Instrument</td><td>21150</td><td>3807</td><td>24957</td><td>1</td><td>24957</td></tr>
</table></td><td>அனுமதிக்கப் பட்டது.</td></tr>
</table>

63

**அலுவலக குறிப்பு : –**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி, பணியின் அவசர அவசியம் கருதி பணி உத்திரவு வழங்கியதற்கு மற்றும் தொகை வழங்குவதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 1128/2021/எச்1**

**<u>பொருள் எண். 26</u>**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் வாகனம் எண். TN45AY0474-ற்கு தகுதி சான்றிதழ் பெற வேண்டியதால் மேற்கண்ட வாகனத்தின் பழுதுகளை சீர்செய்யவும், தகுதி சான்றிதழ் பெறவும், **14.7.2022** அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட மூன்று நிறுவனங்களின் விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண் | பணிவிபரம் | நிறுவனத்தின் பெயர் மற்றும் விலைப்புள்ளி | | |
|---|---|---|---|---|
| | | தாமரை என்டர்பிரைஸ் | ஜோசப் டிங்கரிங் ஒர்க்ஸ் | எபிநேசர் பாடி பில்டர் லேபர் ஒர்க்ஸ் |
| 1 | FC painting, writing and water service | 17,300 | 17,500 | 17,800 |
| 2 | Radiator service and extra cooler change | 11,400 | 11,650 | 11,950 |
| 3 | Spring work – front, rear, service, pin, wasar, push change and service | 36,100 | 36,600 | 37,600 |
| 4 | K80 sakthi battery | 5,500 | 5,800 | 6,800 |
| 5 | All electrical, wireing works, self motor service, danger assumble change, labour and materials | 26,074 | 26,250 | 26,850 |
| 6 | Tinkering works, water beeding, side grill door, food board, front banel , cabin, rear gabin backside, all tinker and welding, labour and materials | 24,185 | 24,240 | 24,640 |
| 7 | Tipper platform change, 2mm steel sheet full change, arc welding, labour and material charge. | 29,000 | 29,500 | 29,700 |
| 8 | Machanicle works, 4 wheel grese backing and break checkup, gear rode change, engine gear grown oil change, stearing repair, oile cooler, oil works, speada meter cable, labour and materials | 45,750 | 45,950 | 45,990 |

மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று நிறுவனங்களில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள தாமரை என்டர்பிரைஸ் விலைப்புள்ளியை மன்றத்தின் பார்வைக்கு முடிவிற்கும்.

அனுமதிக்கப் பட்டது.

| | | | |
|---|---|---|---|
| | 64 | **அலுவலக குறிப்பு**<br>1. குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள தாமரை என்டர்பிரைஸ் நிறுவனத்தாரின் விலைப்புள்ளியை மன்ற ஏற்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரிய நடவடிக்கை எடுத்தமைக்கும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>**ந.க.எண்.401/2021/H1**<br>**<u>பொருள் எண். 27</u>**<br>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்.1725/2022/எம்3 நாள்.24.02.2022–ல் தெரிவித்துள்ளபடி, நகராட்சிகளுக்கு புதிய ஈப்பு வாகனம் GEM Rate விலைக்கு மிகாமல் கொள்முதல் செய்திட அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் உத்திரவு ந.க.எண். 10357/2022/எம்3 நாள்.25.04.2022–ல் தெரிவித்துள்ளபடி, துவாக்குடி நகராட்சிக்கு நகர்மன்ற தலைவர் மற்றும் நகராட்சி பொறியாளர் அலுவலக பயன்பாட்டிற்கு புதியதாக இரண்டு எண்ணம் பொலிரோ ஈப்பு வாகனம் (ஒன்றின் விலை ரூ.8,27,742/–) அரசு நிர்ணயம் செய்யப்பட்ட (GEM Rate) விலைக்கு மிகாமல் வாங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது கடித ந.க.எண்.1725/2022/எம்3 நாள். 06.05.2022–ல் நகராட்சிகளில் பயன்படுத்த அனுமதிக்கப்பட்ட பொலிரோ வாகனம் தற்போது வரை கொள்முதல் செய்யப்படாமல் இருப்பின் நகர்மன்ற தலைவருக்கு ஸ்கார்பியோ வாகனம் (ஒன்றின் விலை ரூ.16,82,000/–) வாங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டு திருத்திய கடிதம் வரப்பெற்றுள்ளது. மேற்படி, கடிதம் வரப்பெற்றுள்ளதை தொடர்ந்து வாகனம் கொள்முதல் செய்வதற்கு Mahindra & Mahindra Ltd, நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற Invoice–ல் தெரிவித்துள்ளபடி, ஸ்கார்பியோ – ரூ.16,31,805/– மற்றும் பொலிரோ – ரூ.9,18,373/– என மொத்தம் ரூ.25,50,178/– மேற்படி நிறுவனத்திற்கு RTGS செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொகை வழங்கியுள்ளதை தொடர்ந்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் ந.க.எண்.1011/2022/இ1 நாள்.30.07.2022ல் இந்நகராட்சி பொறியாளரை பொறுப்பு அலுவலராக நியமித்து உத்திரவு வெளியிடப்பட்டுள்ளதை தொடர்ந்து 01.08.2022–ல் மாண்புமிகு தமிழக முதலமைச்சர், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர், அரசு கூடுதல் தலைமை செயலாளர் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் முன்னிலை இந்நகராட்சி நகர்மன்ற தலைவர் மற்றும் நகராட்சி பொறியாளருக்கு தற்காலிக பதிவு மட்டுமே செய்து ஈப்பு வாகனம் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி, ஈப்பு வாகனத்திற்கு நிரந்தர பதிவு, வாகன காப்பீடு, Life Tax மற்றும் வாகனத்தின் இதர உதிரி பாகங்கள் பொருத்தும் பணிக்கு உத்தேச செலவினமாக ரூ.10,00,000/– மன்றத்தின் அனுமதிக்கு.<br>**அலுவலக குறிப்பு : –**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்படி நிறுவனத்திற்கு தொகை வழங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 908/2022/இ1** | அனுமதிக்கப் பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td>65</td>
<td><u>பொருள் எண். 28</u><br>துவாக்குடி நகராட்சியில் புதிதாக கொள்முதல் செய்த நகராட்சி பொறியாளர் ஈப்பு வாகனம் Bolero (Invoice No.7156358205,Chassis No. MA1XK2TVXN6F32228) & நகர்மன்ற தலைவர் ஈப்பு வாகனம் Scorpio (Invoice No.7230312267, Chassis No. MA1TA2XM2N2E16365) வாகனங்களுக்கு (Road Tax, Motor Vehicle Tax, life Certificate, Registration smart card fee, Certificate fees) போன்றவற்றை வழங்குவதற்கு வட்டார போக்குவரத்து அலுவலர், திருவெறும்பூர் அவர்கள் கீழ்கண்ட விவரப்படி ஆன்லைன் மூலம் செலுத்த கோரியுள்ளார். எனவே, மேற்படி தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.
<table>
<tr><td>Bolero Vehicle Jeep</td><td>Rs.3220/- + Rs. 156460/-</td><td>= Rs.1,59,680/-</td></tr>
<tr><td>Scorpio Vehicle Jeep</td><td>Rs.5757/- + Rs. 283386/-</td><td>= Rs.2,89,143/-</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td>= Rs.4,48,823/-</td></tr>
</table>
அலுவலக குறிப்பு : –<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தொகை ரூ.4,48,823/– ஆன்லைன் மூலம் செலுத்தியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.</td>
<td>அனுமதிக்கப் பட்டது.</td>
</tr>
<tr>
<td></td>
<td>66</td>
<td>ந.க.எண். 908/2022/இ1<br><u>பொருள் எண். 29</u><br>துவாக்குடி நகர்மன்ற தலைவர் அவர்களுக்கும் நகராட்சி பொறியாளர் அவர்களுக்கும் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் செயல்படும் திட்டபணிகள் மற்றும் தல ஆய்வு செய்வதற்கு புதியதாக வாஙகப்பட்ட 2 ஈப்பு வாகனஙகளுக்கு காப்பீட்டு தொகை செலுத்துவதற்கு “United India Insurance Company Ltd” என்கிற நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பில்பட்டியலில் கண்ட தொகை ரூ.83,535/– தொகையினை வழஙகுவதற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br>நகர்மன்றத் தலைவர் ஈப்பு வாகனம்– Mahindra Scorpio - ரூ.55,874/–<br>நகராட்சி பொறியாளர் ஈப்பு வாகனம்– Mahindra Bolero - ரூ.27,661/–<br>அலுவலகக்குறிப்பு:<br>1. மன்றம் அனுமதி வழஙகலாம்.<br>2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தொகை வழஙகியதற்கு மன்றம் அனுமதி வழஙகலாம்.</td>
<td>அனுமதிக்கப் பட்டது.</td>
</tr>
<tr>
<td></td>
<td>67</td>
<td>ந.க.எண். 1614/இ1/2022<br><u>பொருள் எண். 30</u><br>துவாக்குடி நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களுக்கு சேமநலநிதி கணக்கில் உள்ள இருப்புத் தொகைக்கு 2013 - 2014 –ம் ஆண்டு முதல் 2020 – 2021 –ம் ஆண்டு முடிய வட்டி கணக்கிட்டு பிரேரணை தயார் செய்வதற்கு கீழ்கண்ட விபரப்படி மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது, மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.</td>
<td>அனுமதிக்கப் பட்டது.</td>
</tr>
</table>

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தனிநபர் கணக்கு தயார் செய்தல் | சுருக்கம் தயார் செய்தல் | பிரின்டிங் |
|---|---|---|---|---|
| 1 | Rajrev soft system, சென்னை | ரூ.6500/– (1 வருடத்திற்கு) | ரூ.8500/- (1 வருடத்திற்கு) | ரூ.3.00 (1 பக்கத்திற்கு) |
| 2 | வெங்கட் ஈவென்ட்ஸ், சென்னை | ரூ.7000/– (1 வருடத்திற்கு) | ரூ.9000/– (1 வருடத்திற்கு) | ரூ.3.50 (1 பக்கத்திற்கு) |
| 3 | N டெக் சொலுசன்ஸ், சென்னை | ரூ.7500/– (1 வருடத்திற்கு) | ரூ.9500/ – (1 வருடத்திற்கு) | ரூ.4.00 (1 பக்கத்திற்கு) |

**அலுவலக குறிப்பு**

1. பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள Rajrev soft system, சென்னை அவர்களின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. வட்டி கோரும் பிரேரணை தயார் செய்ய ஆகும் செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**ந.க.எண். 1646/ பி1 /2022**

**<u>பொருள் எண். 31</u>**

68

2021 – 2022 ம் ஆண்டிற்கு வருமானவரி (ஒப்பந்ததாரர்கள், அலுவலர்கள்) பிடித்தம் செய்தமைக்கு TDS தாக்கல் செய்யவும் ஒப்பந்ததாரர்களிடம் பிடித்தம் செய்யப்படும் சரக்கு மற்றும் சேவை வரியை ( E-Filling) திருச்சி, ஆலயம் அசோசியேட்ஸ் நிறுவனம் மூலம் தாக்கல் செய்தமைக்கு ரூ.33,650/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்

அனுமதிக்கப் பட்டது.

**ந.க.எண். 128/ பி1 /2021**

**<u>பொருள் எண். 32</u>**

69

துவாக்குடி நகராட்சியில் வருவாய் மூலதனநிதி மற்றும் குடிநீர் வழங்கல் நிதி 2020–2021 மற்றும் 2021–2022 –ம் ஆண்டிற்கு தணிக்கை செய்வதற்கு ஆண்டு கணக்குகள் தயார் செய்தமைக்கு நீடாமங்களம், டாக்ட் கம்யூட்டர் சொலூசன் (M AARTHI - Tact Computer Solutions) நிறுவனத்திற்கு ரூ.90,000/– வழங்குவதற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்

அனுமதிக்கப் பட்டது.

**ந.க.எண். 128/ பி1 /2021**

**<u>பொருள் எண். 33</u>**

70

துவாக்குடி நகராட்சியில் நகராட்சி பொறியாளர் ஈப்பு வாகனம் Bolero (TN81AZ2421) & நகர்மன்ற தலைவர் ஈப்பு வாகனம் Scorpio (TN81AZ2452) வாகனங்களுக்கு நகர்மன்ற தலைவர், நகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களின் அறிவுரைகளின் படி, இதர உதிரி பாகங்கள் புதிதாக பொருத்துவதற்கு உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் கீழ்கண்டவாறு பெறப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

அனுமதிக்கப் பட்டது.

| வ.எண் | விலைப்புள்ளி கோருபவரின் பெயர் | விலைப்புள்ளி விலை (Excluding GST) | |
|---|---|---|---|
| | | பொலிரோ | ஸ்கார்பியோ |
| 1 | M/s. Dharma Auto Accessories | ரூ. 51500/– | ரூ. 42400/– |
| 2 | M/s. Annai Shoppy | ரூ. 54580/– | ரூ. 46870/– |
| 3 | M/s. V2 Auto Accessories | ரூ. 59280/– | ரூ. 48835/– |

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழஙகலாம்.
2. மேற்படி, வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள M/s. Dharma Auto Accessories என்ற நிறுவனத்தாரின் விலைப்புள்ளியினை ஏற்று மேற்படி பணி அவசரப்பணி என்பதால் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழஙகியதற்கும், பணி முடிவுற்று நிறுவனத்தாரரிடமிருந்து வரப்பெற்ற பில்பட்டியலில் கண்ட தொகை ரூ.1,15,915/– தொகையினை வழஙகியதற்கும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

**ந.க.எண். 908/இ1/2022**

71

**<u>பொருள் எண். 34</u>**

துவாக்குடி நகராட்சியில் 15 ஆகஸ்ட் 2022 – 75வது சுதந்திரத்தின அமுதப்பெருவிழாவை முன்னிட்டு அழைப்பிதழ் தயார் செய்தல், நகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர் மற்றும் டெங்கு பணியாளர்களை ஊக்குவிக்கும் விதமாக அனைத்து பணியாளர்களுக்கும் பணியில் சிறப்பாக பணியாற்றியமைக்கு பாராட்டு சான்றிதழ் வழங்குதல், நகராட்சியில் வண்ண தோரணங்கள் அமைத்து அலங்காரம் செய்தல், பள்ளி குழந்தை உட்பட விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் இனிப்புகள் வழங்குதல், விழாவில் கலந்து கொண்ட நகர்மன்ற உறுப்பினர்கள் , அரசு ஊழியர்கள் மற்றும் பணியாளர்களுக்கு காலை சிற்றுண்டி மற்றும் தண்ணீர் வசதி தயார் செய்தல், நகராட்சி அலுவலகத்தில் மின்விளக்கு வசதி மற்றும் ஒலி பெருக்கி வசதி தயார் செய்யும் பணிக்கு உத்தேச செலவினமாக ரூ.61,000/– மன்றத்தின் அனுமதிக்கு. மேலும், இப்பணி அவசரப்பணி என்பதால் பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் பணி மேற்கொள்ள இந்நகராட்சிக்கு பொதுசுகாதாரப்பிரிவிற்கு ஏற்கனவே பொருட்கள் சப்ளை செய்துவரும் ஒப்பந்ததாரர் M/s. தாமரை எண்டர்பிரைசஸ் என்ற நிறுவனத்தின் மூலம் பணியினை மேற்கொண்டமைக்கு நகர்மன்றத்தின் அனுமதிக்கு.

அனுமதிக்கப் பட்டது.

**அலுவலக குறிப்பு : –**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணி அவசரப்பணி என்பதால் நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதற்கும், பணி முடிவுற்று நிறுவனத்தாரரிடமிருந்து வரப்பெற்ற பில்பட்டியலில் கண்ட தொகை ரூ.60,800/– தொகையினை வழங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1624/இ1/2022**

| | | | |
|---|---|---|---|
| | 72 | **<u>பொருள் எண். 35</u>**<br>நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.1011/2022/இ1 நாள்.30.07.2022—ல் தெரிவித்துள்ளபடி, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 01.08.2022—ல் தஞ்சாவூர் மண்டலத்திற்குட்பட்ட நகராட்சி நகர்மன்ற தலைவர், ஆணையர் மற்றும் பொறியாளருக்கு அலுவலகப்பயன்பாட்டிற்காக ஈப்பு வாகனங்கள் வழங்கப்பட உள்ளது. மேற்படி இந்நகராட்சிக்கு வழங்க இருக்கும் 2 ஈப்பு வாகனங்கள் உட்பட இம்மண்டலத்திற்கு வழங்கப்பட உள்ள ஈப்பு வாகனங்களை ஒருங்கிணைப்பு செய்து பெற்று வருவதற்காக இந்நகராட்சி பொறியாளரை பொறுப்பு அலுவலராக நியமித்து உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர், நகர்ப்புற நிர்வாகத்துறை அமைச்சர் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் முன்னிலையில் ஈப்பு வாகனங்களை பெற்று வருவதற்கு இந்நகராட்சியில் பணிபுரியும் ஒப்பந்த ஓட்டுநர் இருவரை அழைத்து சென்று அவர்களுக்கு தங்கும் வசதி, உணவு ஏற்பாடு உட்பட அனைத்து தேவைகளுக்கும் மற்றும் பெற்று வரப்படும் ஈப்பு வாகனங்களில் எரிபொருள் நிரப்பியதற்கும் இந்நகராட்சி பொறியாளர் அவர்கள் மூலம் தொகை செலுத்தப்பட்டுள்ளதால் மேற்படி தொகை செலுத்தப்பட்டதற்கு கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற பில்பட்டியலில் கண்ட தொகை ரூ.18220/— இந்நகராட்சி பொறியாளர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>பயண செலவு — ரூ.1000/—<br>டீசல் (ராஜேஷ் ஏஜென்சி, சென்னை) — ரூ.9794/—<br>ஓட்டுநர் உடை — ரூ.770/—<br>உணவு, இருப்பிடம் — ரூ. 6650/—<br>**மொத்தம் — ரூ.18220/—**<br><br>**அலுவலகக்குறிப்பு:**<br>**1.** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**2.** மேற்படி தொகையினை நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று நகராட்சி பொறியாளருக்கு வழங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 908/இ1/2022** | அனுமதிக்கப் பட்டது. |
| | 73 | **<u>பொருள் எண். 36</u>**<br>துவாக்குடி நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் (KNMT) 2022—23—ன் கீழ் ராவுத்தான் மேடு (அய்யப்பநகர்) சர்வே எண். 282/1A1 பகுதியில் பூங்கா அமைக்கும் பணிக்கு ரூ. 22.20 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு நிர்வாக அனுமதி பெறுவதற்கு கருத்துரு சமர்பிக்கப்பட்டுள்ளது நகர்மன்றத்தின் அனுமதிக்கு.<br>**அலுவலக குறிப்பு:** மன்றம்அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்: இ1/1495/2022** | அனுமதிக்கப் பட்டது. |

74

**<u>பொருள் எண். 37</u>**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு , திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் அரசாணை எண்.79 நாள்.02.06.2022ன்படி அரசு வழிகாட்டுதலின்படி இந்நகராட்சி பகுதியில் வாஙகும் குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை மற்றும் முற்றிலும் பயன்படுத்த இயலாத குப்பைகளாக தரம் பிரிவித்து வாஙக முற்றிலும் தனியார்மயம் மூலம் பணிகள் மேற்கொள்ள 23.06.2022 ஆம் தேதிய மாலை 4.00 மணிக்குள் 3 எல்.சி.வி.வாகனம் வாடகை, ஒட்டுநர் ஊதியம் மற்றும் ஜி.எஸ்.டி. சேர்த்து கூடிய மூன்று வாகனஙகளுக்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு மூன்று நிறுவனஙகளிடமிருந்து விபைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண். | பணிகள் விபரம் | நிறுவனத்தின் பெயர் | | |
|---|---|---|---|---|
| | | Thiru. M.Jeevanandham | Saran Enviro Serices Pvt., Ltd., | Thamarai Enterprises A to Z Service |
| 1 | Hire charges (Per day) for LMV Goods vehicle etc., complete | 1829<br>(1550 +G.S.T 18.%) | 1888<br>(1600+G.S.T 18.%) | 1770<br>(1500 +G.S.T 18.%) |
| 2 | Driver Bata etc., Complete | 655<br>(555 +G.S.T 18.%) | 660<br>(560 +G.S.T 18.%) | 653<br>(553 +G.S.T 18.%) |
| 3 | Diesel (5 Litre/Day/ Vehicle) etc., Complete | 473 | 473 | 473 |
| | Total | 2957 | 3021 | 2896 |

மேற்கண்ட வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் தாமரை எண்டர்பிரைசஸ் நிறுவனத்தாரின் விலைப்புள்ளி குறைவாக உள்ளது மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்

**அலுவலக குறிப்பு**

1. குறைவான விலைப்புள்ளி செலுத்தியுள்ள தாமரை என்டர்பிரைஸ் நிறுவனத்தாரின் விலைப்புள்ளியை மன்ற ஏற்கலாம்.
2. அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரிய மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**ந.க.எண். 1336/2022/எச்1**

அனுமதிக்கப் பட்டது.

75

**<u>பொருள் எண். 38</u>**

துவாக்குடி நகராட்சியில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் நேரடி ஆய்வில், நகராட்சி பகுதியில் அங்காளம்மன் கோவில் தெருவில் ஆய்வு மேற்கொள்ளும் பொழுது அப்பகுதியில் பழுதடைந்துள்ள மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலத்தினை சரிசெய்து தரும்படி அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தனர். எனவே, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் அறிவுரைகளின்படி, நகராட்சி பொறியாளர் மற்றும் பொதுப்பணி மேற்பார்வையாளர் அவர்கள் நேரடி கள ஆய்வு மேற்கொண்டு மேற்படி அங்காளம்மன் கோவில் தெருவில் மழைநீர் வடிகாலுடன் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 9.50 இலட்சத்திற்கு நகர்மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:** மன்றம்அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1705/இ1/2022**

அனுமதிக்கப் பட்டது.

| | | | |
|---|---|---|---|
| | 76 | **<u>பொருள் எண். 39</u>**<br>துவாக்குடி நகராட்சியில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2017–18ன் கீழ் வார்டு எண்.17 ல் துவாக்குடியில் அமைக்கப்பட்டுள்ள பேருந்து நிறுத்தத்தில் விளம்பரம் செய்வதற்கு நகராட்சியின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு விளம்பர வரி மற்றும் அனுமதி கட்டணத்தையும் செலுத்தி பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தாத வண்ணம் பேருந்து நிலையத்தின் முன்புறம் (23.23 ச.மீ), பின்புறம் (23.23 ச.மீ), உள்புறம் (118 ச.மீ) மற்றும் வெளிபுறம் (59 ச.மீ) விளம்பர பலகைகள் அமைப்பதற்காக **“AD Shine Complete Branding Solution”** என்ற நிறுவனத்திடமிருந்து 27.07.2022ல் விண்ணப்பக்கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே, மேற்படி நிறுவனம் விளம்பரம் செய்வதற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை எண்.47 நாள்.26.06.2003ல் குறிப்பிட்டுள்ளபடி, அனைத்து விதிகளுக்கும் உட்பட்டு மேற்படி பணியினை மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதிக்கு.<br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். இ1/1587/2022** | அனுமதிக்கப் பட்டது. |
| | 77 | **<u>பொருள் எண். 40</u>**<br>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.11919/2022/CFC நாள்.15.05.2022–ன் படி, 15வது நிதிக்குழு மான்யத்தின் கீழ் Tied Grant-ன் கீழ் ரூ.81.00 இலட்சத்திற்கு வரையறுக்கப்பட்ட பணிகள் (50% திடக்கழிவு மேலாண்மை பணிகளும் 50% குடிநீர், கழிவுநீர் பணிகளும்) மற்றும் Untied Grant-ன் கீழ் ரூ.54.00 இலட்சத்திற்கு வரையறுக்கப்படாத பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணி விவரம் கோரப்பட்டுள்ளது. எனவே, துவாக்குடி நகராட்சியில் 15வது நிதிக்குழு மான்யம் 2022–23 (Tied Grant & Untied Grant)–ன் கீழ் கீழ்கண்ட விவரப்படி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது நகர்மன்றத்தின் அனுமதிக்கு. | அனுமதிக்கப் பட்டது. |

| வ. எண் | வார்டு எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|---|
| **Works Under Tied Component** | | | |
| | | **திடக்கழிவு மேலாண்மை பணிகள்** | |
| 1. | 21 | நுண்உரம் தயாரிக்கும் மையம் வளாகத்தில் அரைக்கும் இயந்திரம் (Organic Shredding machine) வாங்கி பொருத்தும் பணி | 20.00 |
| 2. | | 8 எண்ணிக்கையிலான பேட்டரியால் இயங்கும் வாகனம் வாங்கும் பணி | 18.00 |
| 3. | 21 | நுண்உரம் தயாரிக்கும் மையம் வளாகத்தில் குடிநீர் வசதியுடன் ஆழ்துளை கிணறு அமைக்கும் பணி | 2.50 |
| | | **மொத்தம்** | **40.50** |
| | | **குடிநீர் பணிகள்** | |
| 4. | 4 & 6 | கருமாரியம்மன் கோவில் தெரு முதல் அய்யனார் கோவில் தெரு வரை குடிநீர் விநியோகக்குழாய் அமைத்து ஆழ்துளை கிணறுடன் HDPE டேங்க் அமைக்கும் பணி | 9.90 |

| | | | |
|---|---|---|---|
| 5. | 6 & 7 | அய்யம்பட்டி மெயின் சாலையில் குடிநீர் விநியோகக்குழாய் அமைத்து ஆழ்துளை கிணறுடன் HDPE டேங்க் அமைக்கும் பணி | 8.60 |
| 6. | 12 | அய்யம்பட்டி மெயின் சாலை ஆனந்த் நகர் பகுதியில் குடிநீர் விநியோகக்குழாய் அமைத்து ஆழ்துளை கிணறுடன் HDPE டேங்க் அமைக்கும் பணி | 5.00 |
| 7. | 10 | சொசைட்டி தெரு, அண்ணாவளைவு பகுதியில் குடிநீர் விநியோகக்குழாய் அமைத்து ஆழ்துளை கிணறுடன் HDPE டேங்க் அமைக்கும் பணி | 7.50 |
| 8. | 21 | மேலத்தெரு பழைய மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி முதல் போஸ்ட் ஆபீஸ் தெரு மற்றும் அய்யப்பா நகர் பகுதியில் குடிநீர் விநியோகக்குழாய் அமைத்தல் | 9.50 |
| | | **மொத்தம்** | **40.50** |
| | | **ஆக மொத்தம்** | **81.00** |
| **Works Under Un-Tied Component** | | | |
| | | **இதர பணிகள்** | |
| 9. | 19 | ராவுத்தான் மேடு (088019S087) அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் மழைநீர் வடிகாலுடன் சிறுபாலம் கட்டும் பணி (வடிகால் நீளம் – 65மீ, அகலம் – 1.2 மீ) | 9.90 |
| 10. | 14 | சமாதானபுரம் மெயின் சாலை (088014R135) மற்றும் குறுக்கு தெருக்களில் (088014S040 to 088014S043, 088014L055 & 088014L056) பேவர் ப்ளாக் சாலை அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகாலுடன் சிறுபாலம் அமைக்கும் பணி (வடிகால் நீளம் – 128மீ, அகலம் – 0.45 மீ) | 44.10 |
| | | **மொத்தம்** | **54.00** |
| | | **மொத்தம் (Tied & Untied)** | **135.00** |

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1428/இ1/2022**

78

**<u>பொருள் எண். 41</u>**

துவாக்குடி நகராட்சியில் வார்டு எண்.9 செடிமலை முருகன் கோவில் தெரு பகுதியில் ஆழ்துளை கிணறுடன் சிறுமின்விசை பம்ப் மற்றும் HDPE டேங்க் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 3.50 இலட்சத்திற்கு நகர்மன்றத்தின் அனுமதிக்கு.

அனுமதிக்கப் பட்டது.

**அலுவலக குறிப்பு:** மன்றம்அனுமதிக்கலாம்.

**ந.க.எண். இ1/1706/2022**

79

**<u>பொருள் எண். 42</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 15959/2021/WS 1 நாள். 12.08.2021–ல் தெரிவித்துள்ளவாறு, அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் குடிநீர் அபிவிருத்தி பணிகள் மூலம் கூட்டுக்குடிநீர் திட்டத்தின் கீழ் (24x7) பொதுமக்களுக்கு கூடுதல் குடிநீர் வழங்குவதற்கு Consultant மூலம் திட்ட அறிக்கை தயார்செய்து Tufidco வாயிலாக சமர்பிக்க

அனுமதிக்கப் பட்டது.

அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, துவாக்குடி நகராட்சியில் மேற்படி பணியினை மேற்கொள்ள விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் கீழ்கண்டவாறு பெறப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | விலைப்புள்ளி கோருபவரின் பெயர் | விலைப்புள்ளி விலை |
|---|---|---|
| 1 | M/s,.SSG Engineering | 2% of Est.Cost (Excluding GST) |
| 2 | M/S Imayam Creators | 2.5% of Est.Cost (Excluding GST) |
| 3. | M/s ECT Infra Solutions Pvt.Ltd., | 2.25% of Est.Cost (Excluding GST) |

மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழஙகியுள்ள M/s,.SSG Engineering என்ற நிறுவனத்தாரர் மூலம் திட்ட அறிக்கை தயார்செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் உத்திரவுபடி கருத்துரு சமர்பிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி பணிக்கு அனுமதி வழங்கப்பட்டவுடன் பணி மேற்கொண்டு மேற்படி நிறுவனத்தாரருக்கு 2% of Estimate Cost (Excluding GST) வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். இ1/984/2022**

ஆணையர்,
துவாக்குடி நகராட்சி.